## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 516/2023

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பவித்ரா | தொழில் | |
| க/பெ | விநோத் ராஜ் | வயது | |
| ஊர் | | தேதி | 15.07.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (15.07.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் குடும்ப தலைவியாக வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருக்கிறேன் . எனது கணவர் காவல் துறையில் மாவட்ட குற்ற பிரிவில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறார் . எனது மாமனார் பெயர் குமார் . அவர் அரசு ஒப்பந்ததாரராக பணி செய்து வருகிறார் . எனது மாமானருக்கும் பிரதிவாதிக்கும் முதலில் பழக்கம் ஏற்பட்டது அதன்பிறகு தான் எனக்கும் எனது கணவருக்கும் பிரதிவாதியுடம் பழக்கம் ஏற்பட்டது . பிரதிவாதி எனது மாமானாரிடம் செங்கல் வாங்குவதில்கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார் என்றால் சரி . ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்வதற்கு முன்பு சொத்து தொடர்பாக வில்லங்க சான்று மற்றும் வழிகாட்டி மதிப்பிட்டை வைத்து பார்த்தேனா என்றால் இல்லை . பிரதிவாதிக்கு சொத்து எப்படி கிடைத்தது என்று சொன்னால் அவரது பூர்வீக சொத்து . பிரதிவாதிக்கு சொத்தானது கிரையம் பெறப்பட்ட வகையில் உரிமையானது என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. தாவா சொத்தினை ரூபாய் 4 லட்சத்திற்கு கிரையம் பேசினோம் . எவ்வளவு தொகை முன்பணமாக கொடுக்கப்பட்டது என்றால் ரூபாய் 3, 50,000/- . எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 09.03.2021 ம் தேதி கொடுக்கப்பட்டது . பாக்கி தொகையான ரூபாய் 50,000/- த்தை செலுத்துவதற்கு 2 வருடம் கால அவகாசம் கொடுக்கப்பட்டது அன்றைய தினமே பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரி. கிரைய ஒப்பந்தத்தை நான் தான் தயார் செய்தேன் என்றால் சரி . வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு அலைபேசி வாயிலாக 3, 4 முறை கேட்டுள்ளோம் எந்த தேதியில் கேட்டோம் என்று அவரது அலைபேசி எண் ஆகியவற்றை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரி. பொதுவாக கிரைய ஒப்பந்தம் போடும் சமயத்தில் குறைவாகக

தான் முன்பணம் கொடுக்கப்படும் என்றாலும் கிரையம் பதிவு செய்யும்பொழுது தான் முழுபணம் கொடுக்கப்படும் என்றாலும் அதனை மாற்றி பணத்தை கொடுத்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் பிரதிவாதியை அவசர தேவைக்காக கேட்டதால் கொடுத்தேன் . எந்த சர்வே எண் தொடர்பாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினோம் என்றால் 58/2 எவ்வளவு விஸ்திரணம் என்றால் 12 1/2 செண்ட். கிரைய உடன்படிக்கையின் போது பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் கூட்டு பெயரில் இருந்தது . யார் பெயரில் இருந்தது என்பது நியாபகமில்லை. எனது கணவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் இல்லை . எனது கணவர் அரசு ஊழியர் என்பதால் என் மூலமாக வட்டிக்ககு கொடுக்கும் தொழிலை செய்து வருகிறார் என்று சொன்னால் இல்லை . பிரதிவாதி 2021 ம் வருடம் அவரது அவசர தேவைக்காக ரூ 3 1/2 லட்சம் ரூபாயை எனது மாமனாரிடம் வாங்கினார்எ ன்றாலும் இந்த கிரைய உடன்படிக்கையானது பெயரளவில் ஏற்படுத்தப்பட்டதுஎன்று சொன்னால் சரி . எனது கணவர் பிரதிவாதியிடம் கட்டாயப்படுத்தி கேட்டதால் தான் கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்று சொன்னால் இல்லை . பிரதிவாதியின் பெயரில் சொத்து உள்ளது என்பதற்கான ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன் என்னஆவணம் என்றால் பத்திரத்தை பார்த்தேன் . பிரதிவாதிக்கு அவரது சகோதரர் செட்டில்மெண்ட் செய்து கொடுத்த ஆவணத்தை தான் பார்த்தேன் என்றாலும் கிரைய பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்று சொன்னாலும் சரி . எனது கணவரிடம் பெற்ற கடனுக்காக மாதம் மாதம் 3 பைசா வட்டியை எனது கணவரிடம் கொடுத்து வந்தார் என்று சொன்னால் இல்லை . இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி வட்டி செலுத்தாத காரணத்தினால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல . 23.01.2023 ம் தேதி நான் வழக்கறிஞர் வாயிலாக அறிவிப்பு அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்ற பிறகு 4 மாதங்கள் கழித்து பிரதிவாதி எங்களை பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி எந்த தேதி என்று சொன்னால் அது எனக்கு நியாபகமில்லை பிரதிவாதி என்னை சந்திக்கவும் இல்லை கால அவகாசமும் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதி எனது கணவரிடம் வாங்கிய கடனுக்காக பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த பத்திரம் என்று சொன்னால் இல்லை.கிரைய பாக்கித்தொகையை கொடுக்க 2 வருட காலம் தேவை இல்லை என்றாலும் உடனே கொடுத்துவிடலாம் என்றாலும் நான் கொடுப்பதாக தான் சொன்னேன் . பிரதிவாதி கடன் வாங்கியதால்தான் 2 வருட காலஅவகாசம் போட்டு ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கையில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் எனது மாமனார் V.M குமார்மற்றும் பொன்னுசாமி என்பவரது மனைவி சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் . பிரதிவாதி எந்த ஒரு காலத்திலும் எங்களிடம் ஏற்படுத்தியது

கிடையாது என்று சொன்னால் சரியல்ல . பொய்யாக அம்சங்களை கூறி இந்த வழக்ககுதாக்கல் செய்யப்பட்டது அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சசொன்னால் சரியல்ல . எனது கணவர் காவல் துறையில் வேலை செய்வதால் பிரதிவாதியை மிரட்டுவதற்காக இந்த வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram